# எழுதி வளர்ந்த இயக்கம் 21

**தி**ராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...

■ பேராசிரியர் சுப.வீரபாண்டியன்



நம் ஊர்களின் தேநீர்க் கடைகளில் கூட, 'தயவுசெய்து இங்கு அரசியல் பேசாதீர்கள்' என்னும் அறிவிப்புப் பலகை தொங்குவதை நாம் பார்த்திருக்கிறோம். 'இது இலக்கியக் கூட்டம், இங்கு அரசியல் எதுவும் வேண்டாம்' என்று கேட்டுக்கொள்கிற நண்பர்களும் நிறைய உண்டு.

அரசியல் என்றாலே சாக்கடை, அரசியல்வாதிகள் அனைவரும் அயோக்கியர்கள் என்னும் கருத்து, இங்கு மக்களின் பொதுப் புத்தியில் திட்டமிட்டுத் திணிக்கப்பட்டுள்ளதே இதற்குக் காரணம். மேலும் அரசியல் பேசினால் கலவரம் வந்து விடுமோ என்கிற அச்சமும் இன்னொரு காரணம்.

சமூகத்தின் இந்த மனநிலையை மாற்ற வேண்டும் என்னும் நோக்கோடும், அனைவரும் அரசியலை அறிந்துகொள்ள வேண்டும் என்னும் தெளிவோடும், **'அரசியல் எனக்குப் பிடிக்கும்'** என்று ஒரு சிறியப் புத்தகம் வெளியாகி இருக்கிறது. தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கத்தைச் சேர்ந்த தோழர் ச.தமிழ்ச்செல்வன் இந்த நூலை எழுதியிருக்கிறார். பாரதி புத்தகாலயமும், சி.ஐ.டி.யு தொழிற்சங்கமும் இணைந்து இந்நூலை வெளியிட்டு இருக்கின்றன.

பக்கங்களின் எண்ணிக்கை அடிப்படையில் சிறியதாக இருந்தாலும், செறிவான கருத்துகளைக் கொண்டுள்ள புத்தகம் இது. அரசு, அரசியல், சமூகம், நாடு, உலகம் என விரிந்து செல்லும் அமைப்பைப் பற்றிய நுட்பமான தகவல்களை இந்நூல் தருகிறது.

## அனைத்துக்கும் அரசியலே அடிப்படை

தொடக்க காலத்தில் மக்கள் தனித்தனிக் குழுக்களாக வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு குழுவும் ஒரு சமூகம் என்று அழைக்கப்பட்டது. இந்தச் சமூகம் எப்போது நாடாக மாறியது? ஒரு சமூகத்துக்கு ஒரு தலைவன் வந்தான். அவன் விதிகளைப் பிறப்பித்தான். குழு குடியாயிற்று. குடி குலம் ஆயிற்று. குலம் இனமாயிற்று!

ஒவ்வொரு இனமும் தங்களுக்கு என்று ஓர் அரசை அமைத்துக் கொண்டது. அந்த அரசின் ஆணை செல்லுபடியாகும் வரையிலான எல்லை, இறையாண்மை கொண்டதாகிறது. அந்த இறையாண்மைக்கு உட்பட்ட பகுதி, ஒரு நாடு என்று அழைக்கப்பட்டது.

எனவே ஒரு நாடென்றால், மக்கள் வேண்டும். மக்களை வழி நடத்த அரசு வேண்டும். அரசைத் தீர்மானிக்க ஓர் அரசியல் வேண்டும். ஆதலால் அனைத்துக்கும் அரசியலே அடிப்படையாக இருக்கிறது. அரசியலற்று எந்த ஒரு சமூகமும், நாடும் இருக்க முடியாது என்னும் உண்மையை எடுத்துச் சொல்வதே இப்புத்தகத்தின் அடிப்படை நோக்கம் என்று கூறலாம்.

## வாக்களிப்பதில் தொடங்கும் அரசியல்

அரசு என்றால் அது பல்வேறு வகைப்பட்டது. அந்த வகைகளைக் குறித்தும் இந்நூல் எடுத்துச் செல்கிறது. மன்னராட்சி, மக்களாட்சி, ராணுவ ஆட்சி, பாசிச ஆட்சி என்று பல்வேறு வகையான ஆட்சிகள் உண்டு. இன்று மக்களாட்சியே வரவேற்கப்படும் ஆட்சியாக இருக்கிறது. மன்னர் ஆட்சி நடைபெறும் நாடுகளில்கூட, அவை கொஞ்சம் கொஞ்சமாக முடிவை எட்டிக் கொண்டிருக்கின்றன.



ச.தமிழ்ச்செல்வன்

மக்களை, மக்களே, மக்களுக்காக ஆளும் ஆட்சிதான் மக்களாட்சி என்ற சிறந்த விளக்கத்தை, ஆபிரகாம் லிங்கன், தன் கெட்டிஸ்பர்க் உரையில் குறிப்பிட்டார். அத்தகைய உண்மையான மக்களாட்சி நடைபெற வேண்டுமானால், மக்களுக்கான அரசியலை மக்கள் முதலில் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த 'மக்கள் அரசியலை', எந்தக் கட்சி கொண்டிருக்கிறது என்னும் தெளிவு மக்களுக்கு வந்தாக வேண்டும். தெளிவு வர வேண்டுமெனில், மக்கள் அரசியலைப் பயில வேண்டும். அரசியலில் பங்கேற்க வேண்டும்.

> **'மக்கள் அரசியலை', எந்தக் கட்சி கொண்டிருக்கிறது என்னும் தெளிவு மக்களுக்கு வந்தாக வேண்டும். தெளிவு வர வேண்டுமெனில், மக்கள் அரசியலைப் பயில வேண்டும். அரசியலில் பங்கேற்க வேண்டும்.**

# அரசியல் பேசுங்கள்!

தேர்தலில் வாக்களிப்பதோடு தங்களின் அரசியல் பங்களிப்பு முடிந்துவிடுவதாக மக்களில் பலரும் கருதுகின்றனர். அது முடிவில்லை. அங்குதான் அரசியல் தொடங்குகிறது.

## அரசியலில் மக்களின் பங்கு

ஒரு நாடு சமூகநீதியில், பொருளாதாரத்தில், கலை இலக்கியங்களில் முன்னேறுவதற்கான திட்டங்களை அரசு வகுக்கிறது. அது மட்டுமல்லாமல், பேரிடர் காலங்களில் அரசே மக்களைக் காப்பாற்றுகிறது. இவையெல்லாம் அரசு மக்களுக்காகச் செய்யும் கருணை அடிப்படையிலான உதவிகள் இல்லை. இவை ஒவ்வொன்றும், அரசின் கடமைகள்.

இந்தக் கடமைகளை எல்லாம் அரசு தானாகவே செய்துவிடும் என்ற நம்பிக்கையில் மக்கள் கைகட்டி இருந்துவிட முடியாது. அரசுகள் செய்கின்றனவா என்று கவனிக்க வேண்டும். செய்யத் தூண்ட வேண்டும். தவறானவை செய்யப்படுமானால், அவற்றை விமர்சிக்க வேண்டும். எனவே அரசியலில் மக்களுக்கு பெரும் பங்கு இருக்கிறது.

இந்த உண்மைகளை எல்லாம் உணர்த்துவதும், மக்களை அரசியலில் ஈடுபட வைப்பதும்தான் இந்நூல் தரும் செய்தி. நமக்கு அரசியல் பிடிக்கிறது. மக்களுக்கும் பிடிக்க வேண்டாமா? வாருங்கள், மக்களிடம் அரசியல் பேசுவோம்!

-வாசிப்போம்

## ப்ளாஷ்பேக்



ஆட்சிக் கலைப்பு, தேர்தல் தோல்வி என தொண்டர்கள் துவண்ட காலம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எவ்விதக் கலக்கமும் அடையாமல், எங்களிடையே சிறப்புரையாற்றி உற்சாகம் ஏற்படுத்தினார். மாநாடு முடிந்து தலைவர் சென்னை கிளம்பிய போது மதுரை பாண்டியன் விடுதியில் தொண்டர் அணித் தோழர்களோடு எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**-செந்தில், முன்னாள் துணை அமைப்பாளர், மாவட்ட தொண்டர் அணி, மதுரை மாநகர் மாவட்டம்.**



செந்தில்

### உற்சாகச் சிறப்புரை!


மதுரை தமுக்கம் மைதானத்தில், தி.மு.கழக மாநாடு 21 டிசம்பர் 1991 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம் கலை மரம்!

**1963-ஆம் ஆண்டு கலைஞர் கதை வசனம் எழுதிய 'காஞ்சித் தலைவன்' திரைப்படம் வெளியானது. 1946-ஆம் ஆண்டில் திரையுலகில் நுழைந்த அவர், 'காஞ்சித் தலைவன்' படம் வரை 23 படங்களுக்கு வசனம் எழுதிப் புகழ் பெற்றிருந்தார். அவர் எழுதிய அனைத்து திரைப்படங்களிலும் கழகத்தின் லட்சியங்கள், கொள்கைகளை மறைமுகமாகவோ, நேரடியாகவோ எழுதத் தவறியதில்லை. கலை என்பது கனி தரும் மரம். அதை எனக்கு மட்டும் பயன்படுத்தி, புகழை-பொருளைக் குவித்திட நினைக்கவில்லை. கால்நடையாகச் செல்வோருக்கு கனியும், நிழலும் வழங்கும் சாலையோர மரமாக பொதுநலனுக்கு-புதிய சிந்தனை வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என நினைத்தேன் எனக் குறிப்பிடுகிறார் கலைஞர்.**

## தமிழ் ஆசிரியத்துவ வரலாறு!



இன்றைக்கு தமிழும் தமிழ்நாடும் அடைந்திருக்கும் இடம், நீண்ட நெடிய போராட்டப் பின்னணியைக் கொண்டது. 'தமிழ்நாடு' பெயர் மாற்றம் பேரறிஞர் அண்ணா முதலமைச்சரானதும் சாத்தியமானது. தமிழாசிரியர்களை தலைமையாசிரியர்களாக கலைஞர்தான் தன் ஆட்சிக் காலத்தில் உயர்த்தினார்.

ஒரு காலத்தில் கல்வி நிலையங்களில் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள், படிப்படியாக ஊதியம், தலைமை, நிர்வாக உரிமை என்று அனைத்து நிலைகளிலும் சுயமரியாதையை அடைகின்றனர். காலனிய காலத்தில் தொடங்கிய இப்போராட்ட வரலாற்றை 120-க்கும் மேற்பட்ட அடிக்குறிப்புகளுடன் 'From Pulavar to Professor' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையாக வரலாற்றுப் பேராசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி எழுதிட, ஜெர்மனியைச் சேர்ந்த மேக்ஸ் வெபர் அறக்கட்டளை வெளியிட்டுள்ளது. கல்விப் புலத்தில் தமிழைப் பாடமாக எடுத்துப் படிக்கும் மாணவர்களும், பயிற்றுவிக்கும் தமிழ் ஆசிரியர்களும், ஒட்டுமொத்த தமிழ் மக்களும், கல்வி ரீதியில் தமிழும் தமிழாசிரியர்களும் முன்னெடுத்த போராட்ட வரலாற்றை அறிந்துகொள்ள இக்கட்டுரை துணை புரிகிறது. இக்கட்டுரை இணையத்தில் இலவசமாகப் படிக்கக் கிடைக்கிறது. https://bit.ly/46aNPGN

## திராவிட இயக்க இதழ்கள் - 'பொன்னி'



1947-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்திருக்கிறது, இந்த மாத இதழ். இதனை முருகு.சுப்பிரமணியன், அரு. பெரியண்ணன் ஆகியோர் ஆசிரியர்களாக இருந்து நடத்தியிருக்கிறார்கள். சில ஆண்டுகள் கழித்து, சென்னையிலிருந்தும் வெளிவந்த இந்த இதழ், 1954-ஆம் ஆண்டு வாக்கில் நின்றுபோனது. திராவிட இயக்கத் தலைவர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் படைப்புகளைத் தாங்கிய பொங்கல் மலர்களையும் இந்த இதழ் வெளியிட்டுள்ளது.

"இந்த இதழில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பாடல்களை வெளியிட்டும், அதற்குத் தகுந்த படங்களை முகப்பில் வெளியிட்டும் இதழாசிரியர்கள் பாவேந்தர் புகழ் பரப்பியுள்ளனர். 'பாரதிதாசன் பரம்பரை' என்ற ஓர் இலக்கிய அணி இந்த இதழின் வழி உருவானது. தமிழகத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர்களான அகிலன், கலைஞர், கவிஞர் கண்ணதாசன், தில்லைவில்லாளன் எனப் பலர் இந்த ஏட்டில் எழுதியுள்ளனர்" என்கிறார் ஆய்வாளர் மு.இளங்கோவன்.


ஏழு ஆண்டு காலம் வெளிவந்த இந்த இதழில், பாவேந்தரின் கவிதைகள் மட்டுமல்லாது, புதிய கவிஞர்கள் பலரின் கவிதைகளும் இடம்பெற்றிருந்தன. பாரதிதாசன் காட்டிய மரபில், அவர் கொள்கை வழி நின்று, பாடல் இயற்றக் கூடியவர்கள் என்று அடையாளம் காணப்பட்ட 47 கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து, **'உவமைக் கவிஞர்'** சுரதா, 'பாரதிதாசன் பரம்பரை' என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

"புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைகளையும் அவர்தம் இலக்கியச் சிறப்பையும், தமிழுலகத்தில் பரப்புவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, ஆரம்பம் முதலே பாவேந்தரின் கவிதையை ஒவ்வோர் இதழிலும் வெளியிட்டு வந்தோம். அந்த நாளில் புரட்சிக் கவிஞருக்குத் தமிழகத்தில் அத்துணைப் பெரிய செல்வாக்கு இல்லை.

திராவிடர் கழகத் தொண்டர்கள் மத்தியிலும் சுயமரியாதை இயக்கத்திலும் மட்டுமே பாவேந்தரின் புகழ் பரவி இருந்தது. அந்த நிலையை மாற்றித் தமிழ் இலக்கிய உலகம் அனைத்திலும் பாவேந்தரின் பெயரும் அவர் வடித்திருக்கும் கவிதைகளும் பரவ வேண்டுமென்று நாங்கள் ஆசைப்பட்டோம்.

**'பொன்னி'** இதழ், தான் வாழ்ந்த ஏழு ஆண்டு காலத்தில் தன்னுடைய இந்த இலட்சியத்தில் நல்ல வெற்றியைக் காண முடிந்தது என்பதே எனது கருத்தாகும்" என்று அந்தப் புத்தகத்தின் அணிந்துரையில் குறிப்பிட்டிருக்கிறார் முருகு சுப்பிரமணியன்.

## திராவிடத்தால் வாழ்கிறோம் 154




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131